# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

CITU

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


**சுற்றறிக்கை எண் 10/2013** **நாள் : 15/03/2013**

*பெறுநர்*

***மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்,***
***கிளைச் செயலாளர்கள் மற்றும்***
***மாநில செயற்குழு உறுப்பினர்கள்.***

அன்பான தோழரே,
வணக்கம்,

5.3.2013 - பெருந்திரள் கூட்டு முறையீடு போராட்டத்தில் முன் வைக்கப்பட்ட சில கோரிக்கைகளை வாரியம் தீர்த்து வைத்துள்ளது. சில கோரிக்கைகளை வாரியம் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. வாரியம் தீர்ப்பதாக ஏற்றுக் கொண்ட காலி பணியிடங்களை நிரப்புவது, மஸ்தூர்களை களஉதவியாளர்களாக நியமிப்பது, கணக்கீட்டாளர் இரண்டாம் நிலை, ஹெல்பர் கம் மீட்டர் ரீடர் ஆகியோர்களின் அடுத்த பதவி உயர்வுக்காக நிர்ணயிக்கப்பட்ட கால அளவு 5 ஆண்டு என்பதை குறைப்பது மீதமுள்ள கோட்டங்களுக்கு உதவி நிர்வாக அலுவலர், மதிப்பீட்டு அலுவலர் போன்ற பதவிகளையும் மின் வாரிய தொழிலாளிகளுக்கு அரசு ஊழியர்களுக்கு அளித்தது போல ரூபாய் 2000/-த்தை அளிப்பது, பகுதி நேர ஊழியர்கள் பணி நிரந்தரம் சம்மந்தமாக தொடர்ந்து நடவடிக்கை எடுப்பது, பணி ஒய்வு பெற்றவர்களுக்கு லீவ் ஆன் பிரைவேட் அபயர்ஸ் சம்மந்தமாக தீர்ப்பின் அடிப்படையில் வழங்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பகுதி நேர ஊழியர்களின் பணி நிரந்தரம் சம்மந்தமாக 4.2.2013 தேதியிட்டு வாரியம் ஒரு குறிப்பாணையை வழங்கி உள்ளது. அதன் அடிப்படையில் ரூ.250/-, ரூ.850/-, 7/2009 இல் ரூ.1000/- என தொடர்ந்து பெற்ற பகுதி நேர துப்புறவு பணியாளர்களுக்கு 4.4.2003 முதல் காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டும் என்றும் 15.10.2005 க்கு முன்னர் பணியில் சேர்ந்து 480 நாட்கள் முடிவடைந்த துப்புறவு பணியாளர்களுக்கு கால முறை ஊதியம் வழங்கிட வேண்டும், பகுதி நேர துப்புறவு பணியாளர்களுக்கு வருகைப் பதிவேடு பராமரித்து தினமும் இரண்டு மணி நேர வேலை என பயன்படுத்துவது. அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி போன்றவைகளை வழங்குதல், பி.எஸ், எப்.எஸ் ரூ. 50 + ரூ.25 பிடித்தம் செய்வது போன்ற அம்சங்கள் இருந்த போதிலும் 15.10.2005 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஒப்புதல் பெறாமல் பணியில் சேர்க்கப்பட்டவர்கள் கால முறை ஊதியம் அளிக்கக்கூடாது மேற்கண்ட தகுதிகள் இல்லாமல் பணி நிரந்தராம் ஏற்க இயலாது என்பன போன்ற பாதகமான அம்சங்களும் மேலும் பகுதி நேர ஊழியர்களுக்கு தற்செயல் விடுப்பு மாதம் ஒன்றுக்கு ஒரு நாள் என அனுமதித்து விட்டு, ஈட்டிய விடுப்போ, மருத்துவ விடுப்போ ஏதும் வழங்க விதிமுறைகள் இல்லை என்றும், பகுதி நேர துப்புறவு பணியாளர்களின் விருப்ப மாறுதல், தங்கும் குடியிருப்பு வசதி, கடன் வழங்குதல் போன்றவைகள் தலைமையகத்தின் அறிவுரைப்படியே செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் அந்த குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் உள்ள பாதகமான அம்சங்களை களைய மின்ஊழியர் மத்திய அமைப்பு தொடர்ந்து நடவடிக்கை எடுக்க உள்ளது.

**கூட்டுறவு நாணய சங்க தேர்தல்**

கூட்டுறவு நாணய சங்க தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஏப்ரல் 5 இல் துவங்கி ஏப்ரல் 24 இல் முடிவடைய உள்ளதாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. கூட்டுறவு

நாணய சங்க தேர்தலை நாம் எவ்வாறு அணுக வேண்டும் என்று ஏற்கனவே சுற்றறிக்கைகள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேர்தலைப் பொருத்தவரையில் நமது பலத்தை அதிகரிக்கும் வகையில் நமது நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்றும், இந்த அடிப்படையில் இதர சங்கங்களோடு பேச்சு வார்த்தையும், கூட்டும் அமைய வேண்டுமே தவிர அரசியல் பின்னனியில் கூட்டு என்பது அவசியமில்லை. இந்த அடிப்படையில் பல வட்டங்களில் கூட்டுக்கான பேச்சு வார்த்தைகளும், அதை இறுதிப்படுத்தும் நிகழ்வுகளும் நடைபெறுவதாக தகவல்கள் வந்து கொண்டு உள்ளன. இவைகளின் பின்னணியில் இந்த கூட்டுறவு நாணய சங்க தேர்தலில் நமது செல்வாக்கை உறுதிப்படுத்தும் வகையில் முயற்சிகள் எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

## ரயில்வேயில் சங்க அங்கீகாரத்திற்கான தேர்தல்

ரயில்வேயில் சங்க அங்கீகாரத்திற்கான தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 25, 26, 27 தேதிகளில் நடைபெற உள்ளது. ஏற்கனவே ரயில்வேயில் டி.ஆர்.இ.யு. தேர்தல் மூலம் அங்கீகாரத்திற்கு பின்னரும், டி.ஆர்.இ.யூ.-வின் தொடர்ச்சியான போரட்ட செயல்பாட்டினால் அதன் உறுப்பினர் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது. இந்த முறை தேர்தலில் டி.ஆர்.இ.யு., அங்கீகார சங்கங்களிலேயே முதன்மை சங்கமாக வர வாய்ப்புகள் உள்ளது. இந்த தேர்தலில் எஸ்.ஆர்.எம்.யு. தனது பணபலத்தைரயும், அதிகார பலத்தையும் கையாண்டு நம்மை பின்னுக்கு தள்ள கடின முயற்சிகளை மேற்கொள்ளலாம் என எதிர்பாக்கப்படுகிறது. தொடர்ச்சியான போராட்டத்தின் மூலமாக ரயில்வே தொழிலாளர்களுக்கு பல சாதனைகளைப் பெற்றுத்தந்த டி.ஆர்.இ.யு. இந்த சங்க அங்கீகாரத்திற்கான தேர்தலிலும் பெருவாரியான வாக்குகளைப் பெற்று, அமோகமான வெற்றி பெறுவதற்கு மின் ஊழியர் மத்திய அமைப்பும் தனது பங்கினை செலுத்திட வேண்டியுள்ளது.

சங்க அங்கீகாரத்திற்கான தேர்தலின் டி.ஆர்.இ.யு. வெற்றி பெற பிரச்சாரத்தை ரயில்வே ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லுகின்ற வகையில் அவர்கள் செய்த சாதனைகளை டிஜிட்டல் பேனர் மூலம் அப்பகுதி ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லுகின்ற வகையில் இத்தோடு இணைக்கப்பட்ட வாசகங்களை டிஜிட்டல் பேனர்களாக மின் கட்டண வசூல் மையங்களில் எழுதி வைக்க வேண்டும். ஒவ்வொரு கிளையும் குறைந்த பட்சமாக 4 டிஜிட்டல் பேனர்களை தங்கள் திட்டத்தில் வைப்பதற்குண்டான நடவடிக்கை எடுத்திட வேண்டும். இவைகள் தவிர மின் ஊழியர் மத்திய அமைப்பின் வட்டத் தலைவர்கள் டி.ஆர்.இ.யு. தலைவர்களோடு தொடர்பு கொண்டு பிரச்சாரத்தில் ஈடுபடுவதோடு தேர்தல் நாளான 25, 26, 27 தேதிகளில் அவர்கள் கேட்கும் அனைத்து உதவிகளையும் தந்து உதவிட வேண்டுகிறோம். தட்டி வாசகங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் இறுதிப்படுத்துதல்

2012 ஆம் ஆண்டு முடிவடைந்து நமது சங்க வரவு செலவு கணக்குகளை முடித்து தணிக்கை செய்து ஈ-படிவம் அளித்திட வேண்டியுள்ளது. இவைகள் அனைத்தையும் முடிக்க சில நாட்களே உள்ள நிலையில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் உறுப்பினர் எண்ணிக்கை சென்ற ஆண்டை விட மிக குறைவாகவே உள்ளது. இடைவெளியை ஈடு செய்யும் வகையில் 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் புதுப்பித்தலை உடனடியாக முடித்து மாநில மையத்திற்கு அடிக்கட்டகளையும், ஈவுத் தொகையையும் அளித்து 2011 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை 2012 ஆம் ஆண்டில் தக்க வைத்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம். இவைகளில் ஏற்படும் சுணக்கமோ, இடைவெளியோ நமது அமைப்பின் மீது உள்ள மதிப்பை இழக்கச் செய்யும் என்பதை உணர்ந்து கால நீட்டிப்பு ஏதும் இல்லாமல் உறுப்பினர் புதுப்பித்தலுக்கு முன்னுரிமை அளித்து முடித்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

**ரெயில்வேயில் ஏப்ரல் 25, 26, 27 தேதிகளில் நடக்கவிருக்கும்**
**அங்கீகார சங்கத் தேர்தலில் DREU விற்கு நட்சத்திர சின்னத்தில் வாக்களித்து**
**அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்குமாறு**
**தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.**

- 5000 ஆக்ட் அப்பரண்டீஸ்களுக்கு லஞ்சம் ஏதும் இல்லாமல் போராட்டம் மூலமாக வேலை பெற்று கொடுத்த சங்கம் DREU
- 2008, 2009, 2010, 2011 என தொடர்ந்து நாடாளுமன்றம் முன்பு போராடி தொழிலாளர்களின் பல்வேறு கோரிக்கைகளில் வெற்றி பெற்றது DREU
- புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்று போராடுவதோடு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து 1.1.2004 முதல் வேலைக்கு வந்து இறந்த தொழிலாளரின் குடும்பத்திற்கு குடும்ப பென்சனும் DCRG யும் பெற்றுக் கொடுத்த ஒரே சங்கம் DREU
- ஸ்பெஷல் கிளாஸ் கேட்டுகளுக்கு 3 பேர் போட வேண்டுமென்று 14 நாட்கள் தொடர் உண்ணாவிரதமிருந்து வெற்றி பெற்றது DREU
- ஆறாவது சம்பளக் கமிஷன் அரியர்ஸையும், போனஸ் பேமென்டையும் ECS மூலமாக பெற்று கொடுத்தது DREU
- திருச்சி சொஸைட்டி, சென்னை அர்பன் வங்கிகளின் 1400 கோடி ரூபாய் ஊழல்களை எதிர்த்து நடவடிக்கை கோரி CBI அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்த அமைப்பு DREU
- ஊழல்கள் மீது நடவடிக்கை கோரி CBI மீது வழக்கு தொடுத்த ஒரே சங்கம் DREU
- 7 வது சம்பளக் கமிஷன் அமைக்க கோரியும், 50 சதம் DA வை அடிப்படை சம்பளத்துடன் இணைக்கக் கோரியும் முதலில் கோரிக்கை வைத்த சங்கம் DREU
- RRC அலுவலகம் முன்பு போராட்டம் நடத்தி RRC மூலமாக பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை பெற்றுக் கொடுத்த சங்கம் DREU
- லஞ்சம், லாவண்யம், ஊழல், இல்லாமல் செயல்படும் அமைப்பு DREU
- பேனாஸ் உச்ச வரம்பை 2500 லிருந்து 3500 ஆக உயர்த்தி அரியர்ஸ் பெற்றுக் கொடுத்த சங்கம் DREU
- திருமணமான ஆண் வாரிசுகளுக்கு வேலை பெற்று கொடுத்த சங்கம் DREU
- 7 வது சம்பளக் கமிஷன் அமைத்திடுக, பஞ்சப்படியை அடிப்படை சம்பளத்துடன் இணைத்திடுக லார்ஜஸ்ஸை விரிவுபடுத்தி அனைவருக்கும் வேலை, உச்சவரம்பில்லா போனஸ் பெற்றிட, வருமானவரி உச்ச வரம்பு 5 லட்சமாக உயர்த்திட, புதிய பென்சன் திட்டத்தை ஒழித்திட EI ரோஸ்டரை ஒழித்து 8 மணி நேர வேலையை உறுதிபடுத்திட, கீமேன் கிரீஸ் போடும் வேலையிருந்து விலக்கு அளித்திட, 530 ஆக்ட் அப்பரண்டீஸ்களின் வழக்கை முடித்து நிரந்தரம் செய்திட சங், மஸ்தூர் ரேட் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திட சமரசமில்லாமல் தொடர்ந்து போராடும் DREU வுக்கு நட்சத்திரச் சின்னத்தில் வாக்களித்து DREU வை வெற்றி பெற செய்ய தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

**DREU - வுக்கு ★ நட்சத்திரம் சின்னத்தில்**

**வாக்களிப்பீர்! வெற்றிப் பெறச் செய்வீர்!!**